கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகளை மற்ற முறைகளில் இப்படிப்பட்ட சட்டத்தைப் போடாமல், அரசு எடுக்க முடியுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். அப்படியில்லாமல் இப்படிப்பட்ட உச்சநீதி மன்றத்திற்குச் சென்று ஒரு கேள்விக் குறியாக நிற்கக்கூடிய ஒரு சட்டத்தை இயற்றுவது சரியாக இருக்குமா? this is not good.

ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்பதுதான் அரசுக்கு விவேகமாக இருக்கும் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்து, இதை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "1984–ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

THIRU P. PONNURANGAM: I object to the introduction of this Bill.